# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 159/மா/2023**

**நாள்: 13.09.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 23.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2023–ல் பெறப்பட்டு, 159/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

2. மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 23.01.2023 நாளிட்ட தனது மனுவில் :

மதுரை மாநகர், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர் அய்யப்பன் தெரு கதவு எண்.5-ல் வசித்துவரும் R. மயில்சாமி ஆகிய நான் சமூக ஆர்வலரும் (ம) RTI Act 2005 ஆர்வலரும் ஆவேன். கடந்த 12 ஆண்டுகளாக சமூக சேவையில் ஈடுபட்டு அரசு இடங்களை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டவர்களிடம் இருந்து மீட்டெடுத்துள்ளேன்.

மதுரை மாநகராட்சிக்கு மண்டலம் - 2 (வடக்கு), வார்டு -1 புது விளாங்குடி பிட் 2 – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் விஸ்தார அப்பார்ட்மெண்ட் (Visthara Residential) தனித் தனி வீடுகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் உள்ளன. இம்மனை பிரிவுக்காக சுமார் 50 ஏக்கருக்கு மேலாக நிலங்கள் விலைக்கு வாங்கப்பட்டு குடியிருப்பு மனைகள் கட்டப்பட்டுள்ளன. இங்கு சுமார் 700 வீடுகளுக்கும் மேலாக உள்ளது. இங்குள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் திட்ட அனுமதிக்கு மேலாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களால் மாநகராட்சிக்கு வரவேண்டிய "வரி" வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணமான முன்னாள் மற்றும் இன்னாள் அலுவலர்கள் மற்றும்

சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிக தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி விஸ்தார அபார்ட்மென்ட், வீட்டுமனை பிரிவிற்கு அனுமதி பெறும்போது கொடுக்கப்பட்ட "பூங்கா" இடம் காணாமல் போய்விட்டது; பொது பயன்பாட்டிற்கு விடப்பட்ட இடம் (OSR) காணாமல் போய்விட்டது மற்றும் சிறுவர்கள் விளையாட்டு மைதானம், வணிக வளாகத்திற்கு விடபட்ட இடம் காணாமல் போய்விட்டது. மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடங்களான பூங்கா, OSR இடம், விளையாட்டு மைதானம், வணிக வளாக இடத்திற்கு விடப்பட்ட இடங்களை ஆவணத்தின் அடிப்படையில் ஆய்வு செய்து அதில் எத்தனை ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டதோ அவ்விடங்களை முழுமையாக ஆக்கிரமிப்புகளில் இருந்து அகற்றியும் (Remove) அத்துமால் காண்பித்தும், கல் ஊன்றியும் அரசு சொத்துக்களை பாதுகாத்திடவும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டும், இந்த ஆக்கிரமிப்புகளை கண்காணிக்கத் தவறிய மாநகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுத்தும் ஆக்கிரமிப்புகளையும் அகற்றி (Remove) எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டும் - பொது நல பிரச்சினையில் ஈடுபடுவதால், எனக்கு பல தரப்பிலும் மிரட்டல் (Threatening) வருவதால் காவல் துறைக்கு பாதுகாப்புக்கு பரிந்துரை செய்யுமாறும், மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகவும் பணிவுடனும், தாழ்மையுடனும் இருகரம் கூப்பி வேண்டிக்கொள்கிறேன்.

**3. இம்முறைமன்ற கடித நாள் 6.6.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி துணை ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையாளர் (பொ) தன்னுடைய 21.8.2023 நாளிட்ட அறிக்கையில் :**

"மதுரை மாநகராட்சியில், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகரில் வசித்து வரும் திரு. மயில்சாமி என்பவர் திண்டுக்கல் நெடுஞ்சாலையில் விஸ்தார அப்பார்ட்மெண்ட் என்ற கட்டிடம் 2003ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. அப்பொழுது புது விளாங்குடி பகுதி மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்படவில்லை. Town Panchayat-ஆக இருக்கும்போது அந்த கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. சுமாராக 20 ஆண்டுகள் கழித்து புகார் கொடுத்தவுடன் உடனடியாக மண்டலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கட்டிட அனுமதி பெற்றே கட்டப்பட்டுள்ளது. அதில் இருந்து சின்ன deviations கண்டு அறியப்பட்டு அனுமதியற்ற கட்டிடங்கள் மீது மதுரை மாநகராட்சி சட்டத்தின்படி நோட்டீஸ் வழங்கப்பட்டது. 20.04.2023 பிறகு நகராட்சிகள் சட்டம் மாறி புது சட்டம் நடைமுறைப்படுத்திவிட்டதால் மீண்டும் முதலில் இருந்து நடவடிக்கை எடுக்க கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் 01.05.2023 அன்று deviations நோட்டீஸ் வழங்கப்பட்டு 1&2 மற்றும் 3வது நோட்டீஸ் Town & Country Planning Act 56, 57, 80A மற்றும் நகராட்சிகள் சட்டம் 1999-ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வரி revisionக்கு வருவாய் உதவி அலுவலருக்கு உத்தரவு 20 நாட்களுக்குள் உயர்த்த வேண்டும் என்று உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர்களுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது. அனுமதியற்ற கட்டிடம் மற்றும் deviation Building-க்கு 8 ஆண்டுக்குள் கொடுக்க வேண்டும். ஆனால் 20 ஆண்டுக்கு மேல் காலம் கடந்துவிட்டதால் அதன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க பல சிரமங்கள் உள்ளன. இருந்தாலும் உள்ளாட்சி நடுவர் மன்ற உத்தரவின்படி புதிய சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வார்டு உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையர் சேர்ந்து குழுவாய் சிறப்பாக செயல்பட்டு புகார் உத்தரவுடன் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேல் நடவடிக்கைக்காக கோப்பு செயற்பொறியாளருக்கு (திட்டம்) அனுப்பப்பட்டது. ஆனால் செயற்பொறியாளர் (திட்டம்). இதுவரை எந்த நடவடிக்கை எடுக்காமல் நிலுவையில் வைத்துவிட்டார். மண்டல

அளவில் 1,2 & 3 Notice மட்டுமே வழங்க இயலும். Lock & Seal Notices, OSR Park Gifted பெற செயற்பொறியாளர் (திட்டம்) மட்டுமே அதிகாரம் உள்ளது. ஆனால் EE Planning அடுத்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். Deligation of powers உள்ள EE Planning, LPA Approval Plan Apartment அவரால்தான் வழங்கப்பட்டு வருகிறது. Approval வழங்கும் அதிகாரிகளுக்கு மட்டுமே enforcement அதிகாரம் உள்ளது. encroachments evication பண்ணுவது, OSR, Park site-ஐ பத்திரப்பதிவு EE Planning தான் பதிவு செய்ய முடியும் மண்டலங்கள் அளவில் இந்த Powers கிடையாது. மேலும் Approval Layout, Site Approval மற்றும் அப்பார்ட்மெண்ட்களுக்கு செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களால் வழங்கப்படுகிறது. இது சம்மந்தப்பட்ட கோப்புகள் மண்டலத்திற்கு வருவதில்லை. உதவி பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் திட்டத்தில் வழங்கப்படுகிறது. மண்டலத்தின் உதவி ஆணையாளர் மற்றும் உதவி செயற்பொறியாளருக்கு கோப்பு வருவதில்லை. கையெழுத்து எதுவும் போடாத உதவி ஆணையாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளருக்கு OSR, Parks & Encroachments பற்றிய விபரங்கள் மண்டலத்திற்கு தெரிவிப்பதில்லை. மண்டலத்தின் அளவில் அடிப்படையாக செய்ய வேண்டிய வேலைகள் செய்யப்பட்டுள்ளது. செயற்பொறியாளர் (திட்டம்) பிரிவில் உள்ள Clerk-கள் எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை. இது குறித்து EE Planning பலமுறை தெரிவித்தும் மேல்நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. மண்டலம்-2-ல் (வடக்கு) உள்ள அதிகாரிகள் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்படி மனுவை EE Planning - க்கு கொடுத்திருக்க வேண்டும். ஆனால் உதவி ஆணையாளரிடம் கொடுத்துள்ளார். ஆதலால் அவர் மீது மண்டல அளவில் உள்ள அதிகாரத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மேல் நடவடிக்கைக்காக EE Planning-க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விபரம் தங்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

**4. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு 1ல் புது விளாங்குடி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் விஸ்தாரா அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் திட்ட அனுமதிக்கு மாறாகவும் சட்டவிதிகளுக்கு புறம்பாகவும் கட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட விஸ்தாரா அபார்ட்மெண்ட் குடியிருப்பு மனைகளுக்கு அனுமதியின்போது கொடுக்கப்பட்ட OSR இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே விஸ்தாரா அபார்ட்மெண்ட் குடியிருப்புகளுக்கு விடப்பட்ட பொது இடங்களான பூங்கா மற்றும் OSR இடங்களை முழுமையாக ஆவணத்தின் அடிப்படையில் ஆய்வு செய்து இடங்களை அளந்து அத்துமால் காண்பித்து கல் ஊன்றி பாதுகாத்திடவும், ஆக்கிரமிப்புகளை அகற்றியும் (Remove) மேற்கண்ட பூங்கா இடத்தை கண்டுபிடித்தும் பொதுமக்கள் பயன்படுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 12.01.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளவும் இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவிப் செயற்பொறியாளர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"மதுரை மாநகராட்சியில் புதுவிளாங்குடி செம்பருத்தி நகரில் வசித்து வரும் திரு மயில்சாமி என்பவர் தனது மனுவில் திண்டுக்கல் நெடுஞ்சாலையில் விஸ்தாரா அப்பார்ட்மெண்ட் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்த புகார் மனுவையொட்டி மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட குடியிருப்பு, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து Deviation Notice 1.5.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதனைத் தொடர்ந்து Town and Country Planning Act 56, 57 மற்றும் 80A–ன் கீழ் 3 அறிவிப்புகள் மேற்கண்ட குடியிருப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் (பொ) மண்டலம் 2 அவர்களின் 21.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மதுரை புது விளாங்குடியை சேர்ந்த R. மயில்சாமி, மதுரை மாநகராட்சி மண்டலம்-2, (வடக்கு) வார்டு 1ல் திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் விஸ்தாரா அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த அபார்மெண்ட் திட்ட அனுமதிக்கு மாறாகவும், சட்ட விதிகளுக்கு புறம்பாகவும் கட்டப்பட்டுள்ளன என்று மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தெரிவித்து, தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சி, மண்டலம்-2ல் திண்டுக்கல் நெடுஞ்சாலையில் விஸ்தாரா அடுக்குமாடி குடியிருப்பு திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதை தொடர்ந்து Deviation Notice 1.5.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும், இதனை தொடர்ந்து Town and Country Planning Act 56, 57 (S) 80Aன் கீழ் 3 அறிவிப்புகள் விஸ்தாரா குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தொடர் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட விஸ்தாரா அடுக்குமாடி குடியிருப்பு 2003-ல் கட்டப்பட்டது என்றும், அப்போது அப்பகுதி மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்படவில்லை எனவும், தற்போது புகார் மனு பெறப்பட்டவுடன் ஆய்வில் deviation இருப்பதை கண்டறிந்து அக்குடியிருப்புகளுக்கு Town and Country Planning Act 1979ன் கீழ் தாக்கீதுகள் வழங்கப்பட்டது என்றும் ஆனால் மதுரை மாநகராட்சி மண்டலம்- 2ன் உதவி ஆணையரின் மேல் நடவடிக்கைக்கான கருத்துருவை செயற்பொறியாளர் (திட்டம்) செயல்படுத்தப்படாமல் நிலுவையில் வைத்துவிட்டார் எனவும், மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பு OSR, Park Gifted போன்றவற்றிக்கு மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் (திட்டம்) தான் அனுமதி அளிக்க வேண்டும் எனவும், இதற்கான கோப்புகள் மண்டல அலுவலகத்திற்கு செயற்பொறியாளர் (திட்டம்) அனுப்புவதில்லை எனவும், மண்டலத்திற்கு உட்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்

பட்டுள்ளது என்றும் மேற்குறிப்பிட்ட அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது மதுரை மாநகராட்சி சட்டத்தின்படி தாக்கீதுகள் வழங்கப்பட்டது என்றும், ஆனால் புது சட்டம் 20.4.2023 அன்று நடைமுறைக்கு வந்ததால், மீண்டும் முதலில் இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் தன்னுடைய 21.8.2023 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்து, மேலும், செயற்பொறியாளர் (திட்டம்) எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் வைத்துவிட்டார் என்றும் அவருக்குத்தான் எல்லா அதிகாரங்களும் இருப்பதாகவும், மண்டல அளவில் தாக்கீதுகள் மட்டுமே வழங்க இயலும் என்றும் செயற்பொறியாளர் (திட்டம்) தான் காரணம் என்று திசை திருப்பும்விதமாக தெரிவித்திருப்பது வியப்பாக உள்ளது.

7. 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

<u>பிரிவு: 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு:12</u> (1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manager, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அடிப்படையில் இம்முறை மன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது,

மனுதாரர் 12.1.2023 அன்றே மேற்கண்ட விஸ்தாரா அடுக்குமாடி குடியிருப்பு விதி மீறி கட்டப்பட்டுள்ளது என்று புகார் தெரிவித்த நிலையில், மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் புது சட்டம் அமுலுக்கு வந்த காரணத்தினால் 1.5.2023 அன்று தாக்கீது வழங்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். **ஆனால் ஜனவரி 2023 முதல் ஏப்ரல் 2023 வரை மேற்கண்ட விஸ்தாரா அடுக்குமாடி குடியிருப்பிற்கு தாக்கீது வழங்காமல் பணியில் மெத்தனமாகவும், அலட்சியமாகவும் செயல்பட்ட மதுரை மாநகராட்சி மண்டலம்–2ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி**

ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர், செயற் பொறியாளர் (திட்டம்) கோப்புகளை நிலுவையில் வைத்துவிட்டதாக கூறிய கருத்து குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பிவைக்கும்படி மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் **புதுவிளாங்குடி பகுதி மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டப் பிறகு அங்கு ஏதேனும் விதிமீறி கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பின் அதனை கள ஆய்வாளர்களை கொண்டு ஆய்வு செய்து, இக்கட்டடங்கள் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம்–2ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.**

The DMA is directed to ensure that the instructions issued to the Madurai Corporation Commissioner are carried out effectively and promptly without any further loss of time. Unless strict action against the defaulter officials is taken, this kind of violations, deviations and illegalities in constructions will not abate in the Corporation limits. The Forum expresses its deep shock and displeasure over the inaction, lethargy and collusion of the local field officials who habitually wink at such improprieties and infringements and go scot-free in the system.

7. 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   மனை எண்.5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   தல்லாகுளம், மதுரை.
3. உதவி ஆணையாளர் (பொ)
   மண்டலம் 2 (வடக்கு)
   மதுரை மாநகராட்சி, மதுரை – 625 007.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்